செய்தி வெளியீடு எண்: 480 நாள் : 11.09.2013

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.9.2013) தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 78 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பூம்புகார் மீன்பிடித் துறைமுகத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழக கடலோர மாவட்டமான நாகப்பட்டினத்திலுள்ள பூம்புகார் கடற்கரையில் கடல் அலை சுழற்சியின் காரணமாக இயந்திர மீன்பிடி படகுகள் கடற்கரைக்கு அருகில் வந்து மீன்களை இறக்கவும், மீன்பிடி படகுகளுக்குத் தேவையான டீசல், பனிக்கட்டி மற்றும் இதர பொருட்களை ஏற்றி செல்லவும் இயலாத நிலை உள்ளது. இதனால் தற்போது பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு கட்டு மரங்களைப் பயன்படுத்தி மீனவர்கள் சிரமப்பட வேண்டியுள்ளது. எனவே, இச்சிரமத்தை போக்க பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும்.

பூம்புகார் பகுதி மீனவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 1995–ஆம் ஆண்டு பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இரண்டாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட காலத்தில் இத்திட்டம் தொடர்பாக ஆகஸ்ட் 2001–ல் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 40 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய தொல்பொருள் ஆய்வியல் துறையின் ஒப்புதல் கிடைக்கப் பெற்ற பின்னர், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தின் திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பளிப்பு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் 78 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பூம்புகார் மீன்பிடி துறைமுகத்திற்கு இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். பூம்புகாரில் அமைக்கப்படவுள்ள புதிய மீன்பிடி துறைமுகத்தில், அலைத் தடுப்பு சுவர், படகு அணையும் சுவர், மீன் ஏலக்கூடம், சாய்வு தளம், சாலை, கான்கிரீட் தளம், மின் வசதி, குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, தகவல் தொடர்பு போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், இப்புதிய மீன்பிடி துறைமுகத்தினால் பூம்புகார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராம மக்கள் தங்களது மீன்பிடித் தொழிலை பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளும் வகையில் 11 மீட்டர் நீளமுள்ள 150 இயந்திர படகுகளும், 13 மீட்டர் நீளமுள்ள 200 இயந்திரப் படகுகளும், என மொத்தம் 350 இயந்திர மீன்பிடி படகுகளையும், 350 நாட்டுப் படகுகளையும் நிறுத்தும் வகையில் உருவாக்கப்படவுள்ளது. இந்தப் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதன் மூலம் 17 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள்.

தமிழகத்தில் கால்நடை மருத்துவ வசதிகளைப் பெரிதும் மேம்படுத்துவதற்கு பல செம்மையான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறை, தமிழகத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும் மருத்துவ சிகிச்சை மற்றும் மேம்பட்ட பராமரிப்பு முறை சேவைகளை கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் மூலம் வழங்கி வருகிறது. மேலும், கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சேவைகள் கால்நடை ஆய்வாளர்கள் மூலம் கால்நடைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற ஏழை எளிய மக்களின் கால்நடைகளுக்கு கள அளவில் நோய் தடுப்பு பணிகளை ஆற்றிடும் வகையில் 2011–2012ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 289 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை–2க்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னய்யா, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறைச் செயலாளர் முனைவர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் திரு ச. முனியநாதன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 11.9.2013